மகாலட்சுமி அடுக்குமாடிக் குடியிருப்புகளில் 1,500 வீடுகள் இருப்பதாகவும் தெரிவித்திருக்கின்றார். பொதுவாக அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டுகிறவர்கள் துணை மின் நிலையம் அமைப்பதற்கு இடம் கொடுக்க மறுத்து வருகிறார்கள். 1,500 வீடுகளைக் கொண்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு எவ்வளவு மின்சாரம் தேவைப்படும் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த அடுக்குமாடிக் குடியிருப்புப் பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு இடம் ஒதுக்கியிருக்கிறார்களா என்பது எனக்குத் தெரியவில்லை. பொதுவாக சென்னை மாநகரத்தில், அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டுகிறவர்கள் துணை மின் நிலையம் அமைப்பதற்கு இடம் ஒதுக்க வேண்டுமென்று விதி இருந்தாலும்கூட, அவர்கள் அதை முழுமையாகக் கொடுக்காத காரணத்தால்தான் இதுபோன்ற சிரமங்கள் ஏற்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற இடத்தில் துணை மின் நிலையம் அமைக்க இடமிருந்து துணை மின் நிலையம் அமைக்கப்பட்டால் அங்கே மின் பளு குறைவதற்கு வாய்ப்பாக இருக்கும். மேலும், புதைவடங்கள் அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இந்தப் பணிகள் phased manner ஆக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி, மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

52—

மீன் பதனிடும் பூங்கா

***25195—திரு. கே.பி.பி. சாமி:**

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவொற்றியூர் தொகுதியில் மீன் பதனிடும் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2019 ஜூலை 8

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருவள்ளூர் மாவட்டத்தில் மீன் பதனிடும் பூங்கா அமைத்திட ஏதுவாக கும்மிடிப்பூண்டி சிப்காட் வளாகத்தில் 1.16 ஏக்கர் நிலம், சிப்காட் நிறுவனம்மூலம் நீண்டகால குத்தகைக்கு தனியார் பங்களிப்பாளருக்கு வழங்கப்பட்டு, மீன் பதனிடும் பூங்கா அமைத்திடும் பணிகள் 10 கோடி ரூபாய் செலவில் நடைபெற்று வருகின்றன. இந்த மீன் பதனிடும் பூங்கா திருவொற்றியூர் தொகுதியைச் சேர்ந்த அனைத்து மீனவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் என்பதால் திருவொற்றியூரில் தனியே மீன் பதனிடும் பூங்கா அமைப்பதற்கான அவசியம் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள்.*

முற்பகல் 10–10

திரு. கே.பி.பி. சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருவொற்றியூர் தொகுதி, 25–க்கும் மேற்பட்ட மீனவக் கிராமங்களை உள்ளடக்கிய தொகுதியாகும். அதிலும் குறிப்பாக கொசஸ்தலை ஆறு, நெட்டுக்குப்பம் மீனவக் கிராமம் அருகே முகத்துவாரமாக கடலில் சங்கமிக்கின்ற பகுதியாகும். நெட்டுக்குப்பம், தாழங்குப்பம், எண்ணூர்குப்பம், முகத்துவாரகுப்பம், காட்டுக்குப்பம், சிவன்படைவீதி, பெரியகுப்பம், சின்னகுப்பம் உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட மீனவக் கிராமங்கள் எண்ணூர் பகுதியில் இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அந்தப் பகுதியில் ஏற்கெனவே மீன் பதனிடும் பூங்கா இருந்தது. சில காலமாக அது செயல்படாமல் இருந்து வருகிறது. அந்தப் பகுதி மீனவர்களுடைய பயன்பாட்டிற்காக அவசர அவசியத்தைக் கருதி, உடனடியாக அந்தப் பகுதியில் மீன் பதனிடும் பூங்காவினை அமைத்துத்தர வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

2019 ஜூலை 8]

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் தொகுதியைப் பொறுத்தவரையில், நெட்டுக்குப்பம், திருச்சனாங்குப்பம், காமராஜர் காட்டுப்பள்ளி, காமராஜ் நகர் போன்ற பல்வேறு கிராமங்கள் இருக்கின்றன. எனவே, அந்தப் பகுதிக்கு ஒரு* Processing Centre–*மீன் பதனிடும் தொழிற்சாலை அவசியம் தேவை என்பதை அரசு நன்குணர்ந்திருக்கின்றது. எனவேதான், அந்த இடத்தில் இருக்கின்ற மீனவர்கள் தங்களது வாழ்வாதாரத்தைப் பெருக்குகின்ற வகையில், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.200 கோடிக்கு மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு உத்தரவிட்டு, அந்தப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. அப்படி ஆரம்பிக்கப்படுகின்ற சூழ்நிலையிலே, அந்தத் துறைமுகத்திலே நவீன மீன் பதப்படுத்தும் வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படும் என்கின்ற மகிழ்ச்சியான செய்தியை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக, மீன்களைப் பொறுத்தவரையில், உலக அளவில் நல்ல மார்க்கெட் இருக்கின்றது. தமிழ்நாடு என்று சொன்னால், ஏறக்குறைய 5,500 கோடி ரூபாய் அளவிற்கு மீன்களை ஏற்றுமதி செய்கிறோம். குறிப்பாக ஐரோப்பா போன்ற நாடுகளுக்கு மீன்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. வெளிநாடுகளில் உள்ளவர்கள் மீன்கள் சுகாதாரமான முறையில் இருக்க வேண்டும் என்பதை விரும்புவார்கள். இதனால் நல்ல மார்க்கெட்டும் இருக்கும். அதுபோல் பிடிக்கப்பட்ட மீன்களின் தரத்தினை உயர்த்தி மீனவர்களுக்கு நிச்சயமாக நல்ல விலை கிடைக்க உதவும் வகையில் இந்த மீன்கள் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமையும் என்பதை இந்த அரசு நன்குணர்ந்திருக்கின்றது. இதுமட்டுமல்லாமல், மதிப்புக்கூட்டிய மீன் பொருட்களைத் தயார் செய்யும் வசதியும் இருக்கின்ற காரணத்தினால், நிச்சயமாக திருவொற்றியூர் தொகுதியில் மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்குகின்ற எண்ணம் இருக்கின்றது.* Coastal Regulation Zone *ஆக இருப்பதால் துறைமுகத்திலேயே ஒரு நவீன மீன் பதனிடும் தொழிற்சாலை அமைப்பதற்கு ஒத்துக்கொள்வதில்லை. ஒத்துக்கொள்ளும்பட்சத்தில் அந்த இடத்தில்* Processing Centre *அமைக்கலாம். இல்லையென்றால் கொஞ்சம் தூரம் தள்ளித்தான் அமைக்க வேண்டும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்வந்து இடத்தைக் காட்டினால், அனைத்தையுமே*

அரசு முன்வந்து செய்து தருவதற்குத் தயாராக இருக்கின்றது. இதில் எந்தவிதப் பிரச்சினையும் இல்லை. மேலும், 13 கடலோர மாவட்டங்களில் Processing Centre–மீன் பதனிடும் தொழிற்சாலை அமைப்பதற்கு உத்தேசித்து, அதனடிப்படையில் அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள்.

திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் வளத் துறைக்குச் சொந்தமான இடம் எண்ணூர் கொசஸ்தலை ஆற்றுப் பகுதியில் இருக்கின்றது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல், பிடிக்கப்படுகின்ற மீன்களை, எண்ணூர் பகுதியிலிருந்து காசிமேடு துறைமுகப் பகுதிக்குக் கொண்டுவந்துதான் விற்பனை செய்யப்படுகின்ற நிலை உள்ளது. ஆரம்ப காலத்தில் மீன் வளத் துறையின் சார்பாக நடத்தப்படும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மீன்களை ஏற்றி வருகின்ற வண்டிகள் இயக்கப்பட்டன. நீண்டகாலமாக அந்த வண்டிகள் எல்லாம் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அதுபோன்ற வண்டிகளை மீன் வளத் துறை மூலமாக அந்தந்தப் பகுதியில் உள்ள கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கினால் அவர்கள் மூலமாக எண்ணூர், திருவொற்றியூர் பகுதிகளில் பிடிக்கப்படுகின்ற மீன்களை காசிமேடு மீன்பிடித் துறைமுகத்திற்குக் கொண்டுவந்து விற்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல், மீன்பிடித் தடைக் காலம் முடிந்த பிறகு ஐஸ் கட்டிகள் கிடைப்பது மிகவும் வருத்தப்படத்தக்க நிலையில் இருக்கின்றது. மீன்பிடித் துறைமுகத்தில் மின்சாரம் சரிவர கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். இதனால், ரூ.240/–க்கு விற்கப்பட்ட ஐஸ் கட்டிகள் தற்போது ரூ.340/–க்கு விற்கப்படுகின்ற அளவிற்கு நிலைமைகள் மாறிக் கொண்டிருக்கின்றன. இதனால் மீனவர்கள் மிகுந்த சிரமப்படுகின்றார்கள். ஆகவே, அந்த மீன்பிடித் துறைமுகங்களில் உள்ள ice factories–க்கு தங்குதடையின்றி மின்சாரம் கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

2019 ஜூலை 8]

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொசஸ்தலை ஆறு அருகில் அரசாங்க நிலம் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே நான் சொன்னேன், இப்போது* Coastal Regulation Zone permission *கொடுப்பதில்லை. பொதுவாக* Fish Processing Centre *என்பதில் கழிவுகள் வரக்கூடிய நிலை இருக்கின்றது. அந்தக் கழிவுகள் கடலில் கலக்கும்போது மாசு ஏற்படும் என்பதால் கடலுக்கு அப்பால்தான் அதை அமைக்க முடியும். அதில் சாத்தியக்கூறு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால், உங்கள் தொகுதிக்கு 200 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதற்கு நன்றிகூட நீங்கள் சொல்லவில்லையே! இன்றைக்கு 200 கோடி ரூபாய் மதிப்பில் ஒரு பெரிய* fishing harbour *அமையவுள்ளது. கடலூரில்தான்* fishing harbour *இருக்கிறது. அதேபோல் இந்தப் பக்கம் எடுத்துக்கொண்டால், எந்த* fishing harbour*–ம் கிடையாது. அரசு இந்தக் கஷ்டத்தை உணர்ந்து திருவொற்றியூரில் 200 கோடி ரூபாயில், எல்லா வசதிகளையும் கொண்ட* fishing harbour*–ஐ அமைக்கவுள்ளது. இனிமேல் நீங்கள் தாலான்குப்பம், நெட்டுக்குப்பம் போன்ற உங்கள் தொகுதியின் கடைசி கிராமங்களிலிருந்து என்னுடைய தொகுதியான காசிமேட்டுக்கு வரத் தேவையில்லை. நீங்கள் அங்கேயே* market *செய்துகொள்ளலாம். திருவொற்றியூரிலேயே மார்க்கெட் செய்துகொள்ளலாம். இப்போதுகூட நெட்டுக்குப்பம், தாலான்குப்பம் உள்ளிட்ட 20 கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கு* CSR Fund *மூலமாக அவர்களுக்கு வேண்டிய இடுபொருட்களை எல்லாம் கொடுத்தார்கள். வண்டி கொடுப்பது பிரச்சினை இல்லை. வண்டி எவ்வளவு வேண்டுமென்றாலும் நாங்கள் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். இரண்டாவது விஷயம், இந்தத் துறைமுகம் அமைந்துவிட்டால், உங்கள் தொகுதியிலுள்ள நெட்டுக்குப்பம் வாழ்வாதாரம் பெறுகின்ற ஒரு நிலையில் நிச்சயமாக இருக்கும். இந்த நேரத்தில் அதிகமான அளவு, ஐஸ் கட்டிகள் உற்பத்தி ஆகவில்லை என்றும், அதற்குக் காரணம் மின் தடை என்றும் சொன்னீர்கள். மின்சாரத் துறை அமைச்சரிடம் சொல்லியிருக்கிறேன். அதாவது, வானத்திலேதான் மின்வெட்டு,*

தமிழ்நாட்டில் இல்லை மின்வெட்டு என்ற அளவுக்கு ஒரே சீரான uninterrupted quality power supply செய்கின்ற ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். யாராவது உங்களிடம் மின்சாரம் இல்லை என்று application கொடுத்து அதில் pending இருந்தால் நீங்கள் என்னிடம் சொல்லுங்கள். அருகில் இருக்கும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் சொல்லி உங்களுக்கு எவ்வளவு load power வழங்க வேண்டுமென்றாலும் நிச்சயமாக upload செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

53—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

***1243—திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எழும்பூர் தொகுதி, 58–வது வட்டம், நேவல் மருத்துவமனை சாலையிலுள்ள நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நேவல் மருத்துவமனை சாலையில் செயல்பட்டு வந்த அமுதம் நியாய விலை அங்காடிக் கட்டடம் பழுதடைந்ததால் பாதுகாப்பு கருதி 22–8–2016 அன்று லால்குட்டி தெருவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டு இயங்கி வருகிறது. இப்பகுதியில் உள்ள புதிய நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு நிலம் கிடைப்பது அரிதாக இருக்கிறது. எனவே, மேற்படி நியாய விலைக்